**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 17-10-2023**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-10-17 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-10-18 | 2023-10-19 | 2023-10-20 | 2023-10-21 | 2023-10-22 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 5.0 | 8.0 | 4.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 33.0 | 33.0 | 33.0 | 32.0 | 32.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 26.0 | 26.0 | 26.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 94 | 94 | 94 | 92 | 92 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 78 | 78 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 5 | 5 | 5 | 4 | 4 |
| காற்றின் திசை (கோணம்) | 50 | 50 | 50 | 90 | 90 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 6 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அக்டோபர் 20, 21,22 ஆகிய தேதிகளில் லேசான முதல் மிதமான மழைப்பொழிவு எதிர் பார்க்கலாம்; அடுத்த ஐந்து நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை 32.0°C-33.0.0°C ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25.0°C-26.0°C ஆகவும் இருக்கலாம்; காற்றின் ஈரப்பதம் 78-94% வரை எதிர்பார்க்கப்படுகிறது; காற்றின் வேகம் மணிக்கு 4.0-5.0 கி.மீ வரை இருக்கலாம்; காற்றின் திசை வடகிழக்கு முதல் கிழக்கிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

22.10.2023 முதல் 28.10.2023 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு, குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பு நிலையில் பதிவாகக்கூடும்.

## குறுஞ்செய்தி :

அக்டோபர் 20, 21,22 ஆகிய தேதிகளில் லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி தெளிக்கும் போது ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்பொழுது நிலவும் வானிலை காரணமாக நெற்பயிரில் பின்வரும் பூச்சிகள் மற்றும் நோய் தாக்கம் காணப்படலாம்; 1.தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் 2.இலை சுருட்டுப்புழு- ஏக்கருக்கு அசிபேட் 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3. இலைக் கருகல் நோய்- நடவுக்கு பிறகு 30 மற்றும் 45 நாட்களுக்குள் ஏக்கருக்கு இரண்டு முறை காப்பர் ஹைட்ராக்ஸிட் 77 WP 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| உளுந்து | தற்போது நிலவும் வானிலை காரணமாக உளுந்து பயிரில் சாம்பல் நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஏக்கருக்கு கார்பன்டாசிம் 200 கிராம் அல்லது நனையும் கந்தகம் தூள் 800 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். நோயின் அறிகுறி மற்றும் தாக்கத்தினை பொறுத்து 15 நாட்கள் இடைவெளியில் மறு தெளிப்பு மேற்கொள்ளவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | காய்கறி பயிரான மிளகாயில் தற்போது நிலவும் வானிலை காரணமாக சாம்பல் நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதால் கட்டுப்படுத்த நனையும் கந்தக தூள் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 கிராம் அல்லது கார்பன்டாசிம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் என்ற வீதம் மூன்று முறை 15 நாட்கள் இடைவெளியில் அறிகுறிகள் தோன்றியதிலிருந்து தெளிக்கவும். |
| கத்திரிக்காய் | காய்கறி பயிரான கத்தரியில் தற்போது நிலவும் வானிலை காரணமாக ஹட்டா முள் வண்டு தாக்கம் ஏற்படலாம், கட்டுப்படுத்த அசாடிராக்டின் ஆயிரம் பிபிஎம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 மி.லி என்ற வீதம் கலந்து தெளிக்கவும். |
| வெண்டை/ லேடிஸின் விரல் | காய்கறி பயிரான வெண்டையில் தற்போது நிலவும் வானிலை காரணமாக மஞ்சள் நரம்பு தேமல் நோய் தாக்கம் ஏற்படலாம், கட்டுப்படுத்த அசாடிராக்டின் 10 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் வீதம் அல்லது தியாமீதோக்சம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| பாகற்காய் | தற்போது நிலவும் வானிலை காரணமாக பாகற்காயில் பழ ஈ தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த நச்சு உணவு/பொறி மெத்தைல் யூஜினால் + மாலத்தியான் 50 EC இரண்டையும் சம அளவு கலந்து 1:1 விகிதத்தில் ஒவ்வொரு பாலித்தீன் பைகளில் 10 மில்லி லிட்டர் அளவுக்கு எடுத்து நச்சுப்பொறியாக ஏக்கருக்கு 10 வீதம் வைக்கலாம். |